# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.58-2013

சாட்சி : PW12

பெயர் : ராஜேந்திரன் த.பெ.வையாபுரி தேதி:22.08.2025

**1, 6, 7-ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

சம்பவ சமயத்தில் அஸ்தம்பட்டி காவல்நிலைய பொறுப்பு அதிகாரியாக இருந்தேன். அவ்வாறு 20 – 25 நாட்கள் பொறுப்பு வகித்தேன். சொல்லப்பட்ட தேதிக்கு முன்பு மேற்படி நிலையத்தில் பொறுப்பு ஏதாவது வகித்துள்ளேனா என்றால் வகித்துள்ளேன். சரியாக காலகட்டம் நினைவில்லை. மேற்கு விநாயகர் கோவில் தெருவில் அடுத்தடுத்து குடியிருப்பு வீடுகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்கு விநாயகர் கோவில் தெருவிற்கு இந்த வழக்கு விசாரணைக்கு முன்பு சென்றதில்லை. மேற்படி மேற்கு விநாயகர் கோவில் தெரு அஸ்தம்பட்டி காவல் நிலையத்திலிருந்து சுமார் ½ கிமீ தொலைவில் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

2) ஜான்சன்பேட்டையிலிருந்த இந்த வழக்கு சம்பவ இடமான மேற்கு விநாயகர் கோவில் தெருவிற்கு வரவேண்டுமென்றால் கோர்ட் ரோடு வந்து அதிலிருந்து இடதுபுறம் திரும்பி இட்டேரி ரோடு வழியாக வந்து அங்கிருந்து வலது புறமாக திரும்பினால் மேற்கு விநாயகர் கோவில் தெருவை அடையளாம் என்றால் சரிதான். கோர்ட் ரோடு என்பது நீளமான

ரோடு என்றால் சரிதான். இட்டேரி ரோடு இரண்டு பர்லாங் நீளம் இருக்கும். சம்பவம் இடத்தின் எதிரில் மேற்கு பக்கத்தில் ஐஸ்வர்யா மருத்துவமனை இரண்டு மாடி கட்டிடம் உள்ளது என்று சொன்னால் அருகில் இல்லை சற்று தள்ளி உள்ளது. மேற்படி மருத்துவமனையின் மொட்டை மாடியிலிருந்து பார்த்தால் சம்பவ இடம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு பிளாஸ்டிக் தண்ணீர் தொட்டி உள்ளது என்று சொன்னால் நான் விசாரணை மேற்கொண்ட போது இல்லை.

3) சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு வீடு ஒன்றில் 24 மணி நேரமும் செயல்பட்டு வரும் அடுமனை (bakery) ஒன்று உள்ளது என்று சொன்னால் நான் விசாரணை மேற்கொண்ட போது இல்லை. முதல் எதிரியின் விலாசம் 22b, மேற்கு விநாயகர் கோவில் தெரு, மணக்காடு, சேலம் என்றால் சரிதான். 11-வது எதிரி திலீப் (எ) திலீப்குமாரின் விலாசம் 61/60, மேற்கு விநாயகர் கோவில் தெரு, மணக்காடு, சேலம் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து 40 அடி தொலைவில் ஒரு புஸ்பராஜ் என்பவரின் வீடும், சம்பவ இடம் எதிர்புறம் வழக்கறிஞர் இளங்கோ என்பவரின் வீடும் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இளங்கோ மற்றும் புஸ்பராஜ் என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்து சுட்டிக்காட்டியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இருவரும் என் விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட குவிமுச பிரிவு 161(3)ன் படியான வாக்கமூலத்தில் அவர்கள் வீட்டின் எதிரில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு அருகே மாலை நேரங்களில் மதுபோதையில் சிலர் கலாட்டாவில் ஈடுபடுவதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

"22.01.2016 ந் தேதி இரவு 9 ¾ மணியளவில் அந்த கழிப்பிடத்திற்கு முன்னால் ரோடில் பெண்கள் அழும் சத்தம் கேட்டு நான் வெளியில் வந்து பார்த்தபோது யாரோ மூன்று பெண்கள் அழுது கொண்டு இருந்தார்கள், அப்போது யாரோ இரண்டு பேர் ஒருத்தரை காலைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து ரோடில் போட்டுவிட்டு எங்களை எதுக்கிறவங்களுக்கு இந்த கதிதான் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது கழிப்பிடம் பக்கமிருந்து நிறைய பேர் வீச்சருவாள்களுடனும், உருட்டு கட்டைகளுடனும் வெளியே வந்து எல்லோருமே இட்டேரிரோடு பக்கமா ஓடிவிட்டாங்க" என பட்டியல் சாட்சி 11 இளங்கோவனும் பட்டியல் சாட்சி 12 புஸ்பராஜும் எனது விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட குவிமுச 161(3) ல் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பட்டியல் சாட்சிகள் 11, 12 சம்பவ இடத்திலிருந்து சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பார்த்ததாக என் விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்றால் – தெரிவித்துள்ளார்கள், ஆனால் அவர்கள் அந்த நபர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை.

4) மேற்படி பட்டியல் சாட்சிகள் 11, 12 ன் மூலமாக எதிரிகளை அடையாளம் காட்ட அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்டதா என்றால் ஏனைய சாட்சிகள் எதிரிகள் பற்றிய விபரங்களை தெரிவித்ததால் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. பட்டியல் சாட்சிகள் 11, 12 சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பார்த்ததாக தெரிவித்து அடையாளம் தெரியாத நபர்கள் யாரோ என்று என்னிடம் தெரிவித்ததால் இந்த வழக்கில் ஆஜரிலுள்ள எதிரிகளை பட்டியல் சாட்சிகள் 11, 12 ன் மூலமாக அடையாள அணிவகுப்பு நான் நடத்தவில்லை என்று சொன்னால் – சாட்சிகள்

பிரேமலதா, பாப்பாத்தி, ரேவதி ஆகியோர்கள் எதிரிகள் பற்றிய விபரத்தை சரியாக சொன்னதால் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை. மேற்படி சாட்சிகள் பிரேமலதா, பாப்பாத்தி, ரேவதி இறந்து போன நபரின் நெருங்கிய உறவினர்கள் என்றாலும் அவர்கள் ஜான்சன்பேட்டையை சார்ந்தவர்கள் என்றாலும் சரிதான்.

5) சாட்சிகள் பிரேமலதா, பாப்பாத்தி, ரேவதி ஆகியோர்கள் எதிரிகள் பற்றிய விபரத்தை என்னிடம் தெரிவித்ததாக சொல்லியுள்ள நிலையில் அதன் உண்மை தன்மை குறித்து பட்டியல் சாட்சி 11, 12 ன் மூலமாக அடையாள அணிவகுப்பு நடத்தி தெரிந்து கொண்டேனா என்றால் ஏற்கனவே சாட்சிகள் சரியாக சொன்னதால் சாட்சிகள் இளங்கோவன் மற்றும் புஸ்பராஜ் மூலமாக அடையாள அணிவகுப்பு தேவையில்லை என கருதி நடத்தவில்லை. அசா.1 ன் விபத்து பதிவேடு நகலை நான் பார்வையிட்டேன். அதசாஆ.26 விபத்து பதிவேடு நகலில் அசா.1 சம்பவத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் நம்பர் 23, கிழக்கு தெரு, ஜான்சன்பேட்டை, சேலம் என்ற முகவரியில் வைத்து 22.01.2011 அன்று இரவு 09.45 மணியளவில் சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான்.

6) அதசாஆ.26-ல் காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பு உள்ளதா என்றால் உள்ளது. அதசாஆ.26 ல் கண்டுள்ள விபரங்கள் அசா1ல் மருத்துவரிடம் தெரிவிக்கப்பட்டு மருத்துவரால் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். அதசாஆ.1 புகாரில் கண்டுள்ள சங்கதிகளை எழுதியது யார் என்று சொன்னால் நான் சாட்சியிடம் விசாரிக்கும்போது சாட்சி சொல்ல சொல்ல அதைக்கேட்டு

நான் சொல்ல சொல்ல தலைமை காவலரால் எழுதப்பட்டது. அதசாஆ.1 ல் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட தகவலின் பேரில் நான் மருத்துவமனை சென்றதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி தகவல் எழுத்துமூலமாகவா அல்லது வான்செய்தி மூலமாகவா என்ற விபரத்தை அதசாஆ.1 லும், முதல் தகவல் அறிக்கையிலும் மற்ற ஏனைய வழக்கு கோப்பிலும் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் – சரிதான் ஏனென்றால் மருத்துவமனையிலிருந்து புறக்காவலுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு புறக்காவல் நிலையத்திலிருந்து சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவ்வாறு மருத்துவமனையிலிருந்து எந்த அலுவலர் யார் மூலமாக புறக்கால் நிலையத்தில் தகவல் பெற்றார் என்று நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை.

7) அவ்வாறு புறக்காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட தகவலை நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளேன். அவ்வாறான பொதுநாட்குறிப்பின் reference number, entry number விபரத்தை முதல் தகவல் அறிக்கை கலம் 3b ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் – பொதுநாள்குறிப்பு பதிவு விபரம் எண் என்பது தொகுதி ஆகும், அதாவது வால்யூம் 1, 2 என்று குறிப்பிடுவார்கள், அவ்வாறு முதல் தகவல் அறிக்கையில் வால்யூம் 1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதசாஆ.28–ல் கலம் 4–ல் வாய்மொழியாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் அசா1–யை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்ற ஒரு வீரப்பன் என்கின்ற நபர் – மேற்படி அசா1 ன் மாமனாரை இந்த வழக்கில் விசாரணை செய்து சாட்சியாக சுட்டிக் காட்டியுள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை

சாட்சியாக சுட்டிக்காட்டவில்லை.

8) என்னுடைய பிரேத விசாரணை அறிக்கை அதசாஆ.30 கலம்–9 மற்றும் 15–ல் இறந்துபோன நபரை கழிவறையிலிருந்து இழுத்து வந்து ரோட்டில் போட்டதாக சாட்சிகள் சொன்னதாக குறிப்பு எதுவும் இல்லையென்று சொன்னால் அவ்வாறு குறிப்பு ஒன்றும் இல்லை ஏனெனில் மேற்படி அதசாஆ.30 காலம் 9–ல் என்ன காரணத்தினால் மரணம் ஏற்பட்டது என்று குறிப்பு உள்ளது அதே போல் காலம் 15 ல் என்ன காரணத்தினால் எவ்வாறு மரணம் ஏற்படுத்தப்பட்டது என்ற குறிப்பு உள்ளது. அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் அன்றாடம் சுற்று காவல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரிதான். சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் சுற்றுக்காவல் பணியில் யார் ஈடுபட்டார்கள் என்று சொல்ல இயலுமா என்றால் அதற்கான ஆவணத்தை பார்வையிட்டுதான் கூற முடியும். அவ்வாறு சுற்றுக்காவல் பணியில் யார் இருந்தார்கள் என்பதை மேற்படி நிலையத்தின் பொது நாட்குறிப்பினை பார்வையிட்டால் அறிந்து கொள்ள முடியும் என்று சொன்னால் சரிதான்.

9) சம்பவ இடத்திலிருந்து வடபுறம் சென்றால் கன்னங்குறிச்சி ரோடு உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கன்னங்குறிச்சி சாலையின் கிழபுறத்தில் அஸ்தம்பட்டி காவல் நிலையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கன்னங்குறிச்சி சாலையில் காவல்நிலையம் செல்லும் சாலையில், காவல் நிலையத்திற்கு முன்பாகவே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று உண்டு என்று சொன்னால் சம்பவ சமயத்தில் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள உழவர் சந்தையில் வியாபாரிகள் எத்தனை மணி அளவில் தங்கள் பொருட்களை

வந்து இறக்குவார்கள் என்று சொன்னால் மாலை 07.00 மணியளவுக்குள் இறக்குவார்கள். சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்களுக்கு வாக்கி டாக்கி பயன்பாட்டிற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சம்பவ சமயத்தில் இல்லை. சம்பவ காலத்தில் செல்போன் அலைபேசி பெரும்பாலாக பயன்பாட்டிற்கு வந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவ காலகட்டத்தில் காவல் நிலையத்திற்கு ஒரு குற்றச்சம்பவம் குறித்து தகவல் கிடைக்கும்பட்சத்தில் அதுகுறித்து உரிய சுற்றுக்காவல் பணியில் இருக்கும் காவலருக்கு எவ்வாறு தகவல் தெரிவிக்கப்படும் என்று சொன்னால் செல்போன் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

10) அசா.3 என்னுடைய விசாரணயில் சம்பவம் தெரிந்து சம்பவ இடத்திற்கு போன பின்னர் அசா1 பிரேமலதாவை மருத்துவமனைக்கு கூட்டி கொண்டு போய்விட்டார்கள் என்றும் அதன்பிறகு அவரும் பயந்து போய் போன் மூலமாக தகவல் கொடுத்தேன் என்றும் அதன்பிறகு எனது அப்பா மற்றும் சிலர் வந்தார்கள் என்றும் அஸ்தம்பட்டி போலிசார் வந்தார்கள் என்றும் அஸ்தம்பட்டி போலிசார் வந்து அசா3–யை விசாரித்தார்கள் என்றும் நானும் சாட்சியம் சொன்னேன் என்றும் சொல்லியுள்ளார் என்று சொன்னால் – அவ்வாறு இல்லை, ஆனால் மேற்படி சாட்சி 3 சம்பவ இடத்தில் இருந்ததாகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், மற்றும் நான் பயந்துபோய் போன் மூலம் தகவல் கொடுத்தேன் அதன்பிறகு எனது அப்பாவும் மற்றும் சிலரும் வந்தார்கள் அஸ்தம்பட்டி போலிசார் இங்கு வந்து விசாரித்தபோது நானும் உடனிருந்து சாட்சியம் அளித்தேன் என்று தான் குறிப்பிட்டுள்ளார்.

11) சம்பவ நேரத்தில் இறந்துபோன நபர் செல்போன் ஒன்று வைத்து

பயன்படுத்தி வந்துள்ளார் என்று என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. மேற்படி செல்போன் எண்ணினை விசாரணை செய்து வழக்கில் தெரிவித்துள்ளேனா என்றால் விசாரித்து தெரிவிக்கவில்லை. சம்பவ சமயத்தில் இறந்துபோன நபரின் செல்போனுக்கு அழைப்பு ஒன்று வந்ததாகவும் அந்த அழைப்பின் பேரில் சம்பவ இடத்திற்கு அவர் வந்ததாகவும்தான் அரசு தரப்பு வழக்கு என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து இரண்டு செல்போன்களை அதன் சிம்முடன் என்னுடைய விசாரணையின் போது நான் கைப்பற்றினேன் என்று சொன்னால் நான் சம்பவ இடத்தில் கைப்பற்றியது ஒரு செல்போனும் அதில் உள்ள இரண்டு சிம்கார்டுகள் ஆகும். உங்களுடைய விசாரணையில் மேற்படி இறந்துபோன நபருக்கு கடைசியாக வந்த அழைப்பு ஆஜர் எதிரிகளின் மூலம் தான் செய்யப்பட்டதா என்பதை குறித்து அறிந்து கொள்வதற்காக மேற்படி இறந்துபோனவரின் செல்போனுக்கு வந்த அழைப்புகளின் விபரங்களை உரிய செல்போன் நிறுவனத்திடமிருந்து பெற்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

12) அசா.1 என் விசாரணையில் தெரிவித்ததுபோல இறந்துபோன நபர் இறப்பிற்கு முன்பாக அவரது செல்போனுக்கு எதிரிகளிடமிருந்து அழைப்பு ஒன்று வந்ததன் மூலமாக தான் சம்பவ இடத்திற்கு சென்றார் என்பதை உறுதிபடுத்துவதற்காக அவருடைய செல்போன் அழைப்பு விபரங்களை பெற்று பார்வையிட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. அசா1–டம் புகார் வாக்குமூலம் பதிவு செய்த போது அவர் வாக்குமூலம் அளிக்குமளவிற்கு நல்ல மனநிலையில் இருந்தாரா என்பதை அந்த சமயத்தில் பணியில் இருந்த மருத்துவரிடம் விசாரணை

செய்து தெரிந்து கொண்டு புகார் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் – அவ்வாறு மருத்துவரிடம் விசாரணை செய்யவில்லை, புகார் வாக்குமூலம் கொடுத்த நபர் அப்போது நல்ல மனநிலையில் இருந்ததால் அவ்வாறு மருத்துவரிடம் விசாரிக்கவில்லை.

13) அசா.1 முதல் அசா.3 ஆகியோர் என்னுடைய விசாரணையில் இறந்துபோன நபர் அவரது வீட்டிலிருந்து இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்திற்கு கிளம்பி போன பிறகு சிறிது நேரம் கழித்து என்று தான் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அசா.1 என்னுடைய விசாரணையில் இறந்துபோன நபரின் நடுமுதுகில் முதல் வெட்டு வெட்டப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சடலக்கூராய்வு அறிக்கை நான் பெறவில்லை. நடுமுதுகில் இறந்துபோன நபருக்கு வெட்டுகாயம் இருந்ததா என்று உங்களுக்கு தெரியுமா என்றால் முதுகில் காயம் எதுவும் இல்லை. நான் விசாரித்த சாட்சிகள் 1, 2, 3 சம்பவ சமயத்தில் இறந்துபோன நபரை முதுகிவல் வெட்டியதாக தெரிவித்திருந்தும் நான் பிரேத விசாரணை செய்யும் போது இறந்து போன நபருக்கு முதுகில் எந்த காயமும் இல்லாததைப் பார்த்து எனக்கு சாட்சிகள் 1, 2, 3 சம்பவத்தை நேரடியாக பார்த்த நபர்களா என்று உங்களுக்கு சந்தேகம் வந்ததா என்றால் எனக்கு அவ்வாறு சந்தேகம் எதுவும் எனக்கு வரவில்லை. அதசாஆ.26 விபத்து பதிவேடு நகலில் பிரேமலதா என்பவர் சிகிச்சைக்காக மருத்துவரிடத்தில் சேர்ந்த போது அவர் பற்றிய விபரத்தில் விலாசம் நம்பர் 23, கிழக்கு தெரு, ஜான்சன்பேட்டை, சேலம் என்று குறிப்பிட்டு தனக்கு காயம்பட்ட இடமானது மேற்படி விலாசத்தில் என்று குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது.

14) சம்பவ சமயத்தில் அந்த தெருவில் இரண்டு கார் நின்றதாக எனக்கு தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். அரசு தரப்பு வழக்கானது மேற்படி இரண்டு கார்களிலிருந்துதான் நபர்கள் இறங்கிவந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு கார்களும் எப்போது சம்பவ இடத்திற்கு வந்தது எவ்வளவு நேரமாக நின்றது அதனை ஓட்டிவந்தவர் யார் அதன் உரிமையாளர்கள் என்ற விபரத்தை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் விசாரித்தேன், யாரும் தகவல் அளிக்க முன்வரவில்லை. அதுகுறித்து வழக்கு கோப்பில் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. இறந்துபோன நபர் பவானியில் மெக்கானிக்காக வேலை செய்து கொண்டு தினமும் சம்பவ ஊருக்கு வந்து செல்வார் என்றாலும் அன்றைய தினம் தான் சம்பவ இட ஊருக்கு வந்திருந்தார் என்ற சொன்னாலும் பவானியில் வேலை செய்து வந்தது உண்மை, அங்கிருந்து வந்து செல்வது உண்மை, ஆனால் சம்பவத்திற்கு 20 நாட்களுக்கு முன்பிருந்து சம்பவ ஊரில் தான் இருந்து வந்தார்.

15) சம்பவ தினம் காலை முதல் மாலை வரை பவானியில் வேலை செய்துவிட்டு சம்பவத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன்புதான் அவரது வீட்டிற்கு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ தினம் இறந்துபோன நபர் பவானி சென்றாரா என்று நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு வேலைக்காக பவானி சென்ற இறந்து போன நபருக்கு அங்கு ஏற்பட்ட தகராறின் தொடர்ச்சியாகதான் சம்பவ இடத்தில் சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபருக்கு பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். சம்பவ

தினமான 22.01.2011–ல் இறந்து போன நபருக்கும் வேறு சில நபர்களுக்கும் பவானியில் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாபெ.4, 7–ல் பதிந்துள்ள கைரேகை யாருடையது என்பதை அறிந்து கொள்வதற்கு முயற்சி செய்தேனா என்றால் இல்லை.

16) 1, 6, 7 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றாலும் இறந்துபோன நபர் பல்வேறு வழக்குகளில் சம்பந்தப்பட்டு பல்வேறு நபரின் பகையை ஏற்படுத்திக் கொண்டதால் அவர்களால் அவருக்கு இறப்பு ஏற்பட்டது என்றாலும் நான் சரியாக விசாரித்து உண்மைதன்மை தெரிந்து கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தினால்தான் அசா.1 மருத்துவரிடத்தில் அடையாளம் தெரியாத நபர்களால் சம்பவம் நடந்ததாக சொல்லியதை பின்னிட்டு எதிரிகளை இந்த வழக்கில் தொடர்புபடுத்த வேண்டி சாட்சிகளும் சான்றாவணங்களும் தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தொடர்புடைய நபர்கள் யார் என்று தெரியாத காரணத்தினால்தான் வழக்கை ஜோடிப்பதற்காக அவகாசம் எடுக்கப்பட்டு பிறகு பிரேத விசாரணையானது 23.01.2011 விடியற்காலை 03.00 மணிமுதல் காலை 06.00 மணி வரை காலதாமதமாக நடைபெற்றது என்றாலும் சரியல்ல.

17) இந்த வழக்கில் இறந்துபோன நபரின் பிரேதத்தை சடலக்கூராய்வு செய்து அறிக்கை தர வேண்டுகோள் கடிதம் என்னால் தயார் செய்யப்பட்டது. மேற்படி படிவம் 86 ல் இறந்து போன நபரை 22.01.2011–ம் தேதியன்று 21.45 மணிக்கு மேற்கு விநாயகர் கோவில் தெரு, உழவர் சந்தைக்கு பின்னால் உள்ள பொது கழிப்பிடம் முன்பு இறந்து போன

பிரேதம் கண்டுபிடிக்கபட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதமானது இந்த வழக்கின் வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பு அதாவது குற்ற எண் வழங்கப்படுவதற்கு முன்பே தயார் செய்யப்பட்டது என்பதால் தான் மேற்படி அறிக்கையின் மேலே குற்ற எண் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனவே தான் மேற்படி ஆவணமானது 24.02.2011ம் தேதியன்று தான் நீதிமன்றத்தால் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் மேற்படி வேண்டுகோள் கடிதம் மருத்துவருக்கு கொடுக்கப்பட்டு சடலக்கூராய்வு நடவடிக்கைகளுக்கு பிறகு நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த வழக்கில் குவிமுச பிரிவு 157–ன் கீழ் உடனுக்குடன் நீதிமன்றத்தை அடைந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**3–ம் எதிரி குறுக்கு விசாரணைக்காக நேரமின்மை காரணமாக ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/– S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.